

திருவையாறு சட்டமன்ற தொகுதி, வைத்தியநாதன்பேட்டை ஊராட்சியில் புதிய பல்நோக்கு உலர்களத்திற்கான பணிக்கு தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, அடிக்கல் நாட்டினார். விழாவில் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, ஒன்றிய கழக செயலாளர் வை.சிவசங்கரன், பேரூர் செயலாளர் சி.நாகராஜன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் கோ.அரசாபகரன் மற்றும் அரசு அலுவலர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# ஓசூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் ஆய்வு செய்தார்!

ஓசூர், மே 4-

ஓசூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டம், மாவட்ட தலைமை மருத்து வமனை, புதிய பேருந்து நிலையம், வணிக வளாகம், சாலை விரிவாக்க பணிகள், குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சி திட்ட பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு செய்தார் உடன் ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ, மேயர் எஸ். ஏ. சத்யா பங்கேற்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில், ஓசூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டம், மாவட்ட தலைமை மருத்துவமனை, புதிய பேருந்து நிலையம், வணிக வளாகம், சாலை விரிவாக்க பணிகள், குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆணையின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ரூ.582.54 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள புதிய பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் தற்போதைய (2024), இடைக்கால (2039) மற்றும் உச்சகட்ட (2054) மக்கள் தொகை முறையே 2.24, 2.96 மற்றும் 3.91 இலட்சம் என்ற அடிப்படையில் இக்காலகட்டங்களில் நாளொன்றுக்கு உருவாகும் கழிவுநீரின் அளவு முறையே 24.72, 32.65 மற்றும் 43.12 மில்லியன் லிட்டர் என கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கழிவு நீர் சேகரிப்பு கட்டைமப்பாக 110 மி.மீ முதல் 800 மி.மீ வரை விட்டமுள்ள UPVC, DWC மற்றும் HDPE குழாய்கள் 325.14 கி.மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டு, 14,125 இயந்திர இறங்கு குழிகள் அமைக்கப்பட உள்ளன. இவற்றின் மூலம் சேகரிக்கப்படும் கழிவு நீர், 11 கழிவு நீகரற்று நிலையங்கள் மற்றும் 37 கழிவு நீர் உந்து நிலையங்கள் மூலமாக உந்தப்பட்டு இரண்டு சுத்திகரிப்பு நிலையங்களான சந்தாபுரம் ஏரியில் அமைக்கப்பட உள்ள 12.513 எம்.எல்.டி சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ராமநாயகன் ஏரியில் அமைக்கப்பட உள்ள 20.133 எம்.எல்.டி சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (SBR Technology) மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட உள்ளது. சுத்திகரி க்கப்பட்ட கழிவு நீர், குழாய்கள் மூலம் அருகில் அமைந்துள்ள சந்தாபுரம் மற்றும் ராமநாயகன் ஏரிகளுக்கு உந்தப்பட்டு பாதுகாப்பாக வெறியேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தினை மூன்று சிப்பங்கள் மூலமாக செயல்படுத்திட பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து, ஓசூர் மாநகராட்சி, அந்திவாடி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ள தளவாட பொருட்கள் மற்றும் திட்ட அலுவலகம் உள்ளிட்டவற்றை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும், அங்கு நடைபெற்று வரும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து, பொது மக்களுக்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்படாத வகையிலும், குடிநீர் குழாய் உடைப்பு ஏற்படாத வகையிலும் பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும் என அறிவுருத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், ஓசூர் சார் ஆட்சியர் .பிரியங்கா ,ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .மாரிசெல்வி, ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தையா, மண்டல குழு தலைவர் ரவி, சுகாதார குழு மாதேஸ்வரன், உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் .



கோவை மாநகர் மாவட்ட அமைப்பு சாரா ஆட்டோ ஓட்டுனர் அணி சார்பில் கோவை ரயில் நிலையம் அருகில் உள்ள சாந்தி திரையரங்கம் முன்பு மாநகர் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.ஜெயகுமார் தலைமையில், கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்செல்வன், பகுதிச் செயலாளர் வி.ஐ.பதுருதீன், வட்டச் செயலாளர் விஜயகுமார் முன்னிலையில் நடைபெற்ற உழைப்பாளர் தின நிகழ்ச்சியில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி, ஆட்டோ தொழிற்சங்க பெயர்ப் பலகையை திறந்து வைத்து 500 ஆட்டோ மற்றும் டாக்ஸி தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் தொ.மு.ச. சி.கே.செல்லப்பா, ஆர்.முகிலன், நவாஸ், அஜீஸ், கோவை இக்பால், துணை அமைப்பாளர் சுந்தர், மாவட்ட பிரதிநிதி முத்தழகன், சபரி கோபால், வீரகேரளம் சுரேஷ், வினோத், ஜெபராஜ், ஜலீல், அக்கீம், ஸ்டீபன், ஆசிப், சாதிக், கழக நிர்வாகிகள், மாநகர் மாவட்ட ஆட்டோ ஓட்டுனர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச.நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அவிநாசி நகராட்சி - ஒன்றியப் பகுதிகளில்

# ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. துவக்கி வைத்தார்!

திருப்பூர், மே 4-

திருப்பூர் மாவட்டம், அவிநாசி நகராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூபாய் 3.47 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்ட பணிகளை துவக்கி வைத்து புதிய பேருந்து நிலையம் எதிரில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதியில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட. பயணிகள் நிழற்குடையை மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா திறந்து வைத்தார்.

அவிநாசி நகராட்சி 14 வது வார்டு முதல்வரின் 110விதியின் கீழ் ரூபாய் 1,27,55,180 மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட அவிநாசி தேரோடும் வீதிகளில் மேல்நிலை மின் பாதைகளை மின் புதை வடங்களாக அமைக்கும் பணி, அவிநாசி ஒன்றியம், சின்னேரிபாளையம் ஊராட்சியில் 2025-2026 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சின்னேரிபாளையம் ஊராட்சியில் ரூபாய் 42,97,636.14 மதிப்பீட்டிலும், கருவலூர் ஊராட்சியில் ரூபாய் 47,34,448.96 மதிப்பீட்டிலும், புலிப்பார் ஊராட்சியில் ரூபாய் 44,56,102.93 மதிப்பீட்டிலும், ஊப்பிலிபாளையம் ஊராட்சியில் ரூபாய் 42,54,593.38 மதிப்பீட்டிலும்,

தண்டுக்காரன்பாளையம் ஊராட்சியில் ரூபாய் 44,89,836.95 மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூபாய் 3,46,90,798.36 மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்து, அவிநாசி நகராட்சி 16வது வார்டு புதிய பேருந்து நிலையம் எதிரில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதியில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பயணிகள் நிழற்குடையை மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கழக மருத்துவர் அணி இணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்ற மேற்பார்வையாளர் மருத்துவர் கோகுல் கிருபா சங்கர், மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.பழனிச்சாமி திருமுருகன்பூண்டி, ஈ.பா.சிவப்பிரகாஷ் அவிநாசி, க.பால்ராஜ் சேவூர், நகர கழக செயலாளர்கள் திராவிடன் வ.வசந்தகுமார்

அவிநாசி, கிருஷ்ணமூர்த்தி திருமுருகன்பூண்டி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்ஜசி அவிநாசியப்பன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பெரியார் காலனி எம்.எஸ்.மணி, நகராட்சி ஆணையாளர் பாரதி, நகராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி, மாவட்ட இலக்கிய அணி தலைவர், நகர அவைத் தலைவர் ராயப்பன், துணைச் செயலாளர்கள் பர்கத் சாந்தி சீனிவாசன், மாவட்ட பிரதிநிதி வேலுசாமி, சின்னக்கண்ணன், பொருளாளர் தங்கவேல், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் சு.செல்வரங்கம்,

திருப்பூர் மேற்பார்வை மின் செயற்பொறியாளர் விஜயஈசுவரன், அவிநாசி மின் கோட்ட செயற்பொறியாளர் பரஞ்சோதி, நகர உதவி செயற்பொறியாளர் ராஜா உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.


